**காரைநகர் பிரதேச சபை - 2020**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

காரைநகர் பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவின கணக்கு காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காரைநகர் பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக்கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பாக ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவு, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்த்தல் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா என்பதும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள்ளும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்கவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகளை கொண்டுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கிணங்க பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (i) (ஈ) (iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கிணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 2,267,132 நிர்மாணத்துடன் கூடிய 05 மயானங்களின் பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்காதமையினால் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி குறைத்து காட்டப்பட்டிருந்தது. | 05 மயானங்களிற்குரிய மீள்மதிப்பீட்டு பெறுமதி 2021 ஆம் ஆண்டிற்குரிய இறுதிக் கணக்குகளில் சேர்த்துக்கொள்ளபபடும். | கணக்குகளில் சொத்துக்களின் பெறுமதி சரியாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | கொள்வனவு செய்யப்பட்டிராத மின்விளக்கு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டதாக கருதி சில்லறைக் கடன்கொடுத்தோர் கணக்கிற்கு சீராக்கம் செய்யப்பட்டதனால் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட செலவினமும் நடைமுறை பொறுப்புக்களும் ரூபா 700,000 தொகையால் அதிகரித்து காட்டப்பட்டிருந்தன. | கொடுப்பனவை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது | கணக்கீட்டு தத்துவங்கள் மற்றும் கொள்கைகளின் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 6,636,549 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 9,836,824 ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி என்பன தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கசூர்னா கடற்கரையினை அழகுபடுத்துதல், பாரம்பரிய உணவகம், மலசல கூடம் மற்றும் சிறுவர் பூங்கா அமைத்தல் ஆகிய செயற்பாடுகளிற்காக ரூபா 15,827,506 தொகை செலவிடப்பட்ட போதிலும் அச் சொத்துக்கள் நாளதுவரை விளைவற்றிருந்தன. | மீண்டும் கேள்விகோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் விளைவற்று இருக்கக்கூடாது. |